DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU

Calendar

Miscellaneous

Preliminary Register Case No.C.C. 34 of 2024 PW : 5

Sessions

Prosecution

Deposition of witness for Defence

Court

Name : திருமதி.பிருந்தா

Husband's Name : திரு. லட்சுமி பிரசாத்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age : 24

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.04.2026.

**தேதி..27.04.2026 ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 34/2024, அ.த.சா.5. திருமதி. பிருந்தா, க/பெ. லட்சுமி பிரசாத் வயது 24 அவர்களை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செயய்ய அனுமதிக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் தற்போது முனுசாமி நாயுடு கண்டிகையில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடைய தான் **அந்த கையொப்பம் அ.த.சா.ஆ 3 குறியீடு செய்யப்படுகிறது**. மேற்கண்ட கையொப்பத்தை சம்பவம் நடந்த 27/12/2023 மறுநாள் காலை 09.00 மணியளவில் சம்பவத்தில் பள்ளிப்பட்டு போலீசார் என்னை விசாரணை செய்து படம் வரைந்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். நானும் எனது தாயாரும் கையொப்பம் செய்தேன். அதற்கு முதல் நாள் எனது பாட்டியை ஆஜர் எதிரி வீட்டிற்குள் வந்து தாக்கியது குறித்து போலீசார் விசாரணை செய்தார்கள் நான் விசாரணையில் நடந்ததை கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனது பாட்டிக்கு பேத்தி என்றால் சரிதான். சம்பவம் 26/12/2023 மாலை 05.00 மணிக்கு நடந்தது என்றால் சரிதான். மரம் வெட்டியது எனக்கு தெரியாது. விவேக் என்பவர் என்னுடைய அண்ணன் என்றால் சரிதான். விவேக் வழக்கமாக ஆங்கிலத்தில் கையொப்பம் செய்வார் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் சம்பவம் எங்கள் வீட்டில் நடந்ததாக கூறியுள்ளீர் என்றால் சரியல்ல. மாதிரி வரைபடத்தில் எங்கள் வீடு காணப்படவில்லை பக்கத்து தெருவில் இருக்கிறது. எத்தனை மணிக்கு போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றனர் என்றால் மறுநாள் காலை 11.00 மணிக்கு. மீனாவின் கனவர் லோகேஷ் மீனாவின் சகோதரர் தனஞ்செயலு. எதிரிக்கும் தனஞ்செயலுக்கு நில தகராறு இருப்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

**ஒப்பம் A. தரணிதரன்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்,**

**பள்ளிப்பட்டு**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU</u>

Calendar

Miscellaneous

Preliminary Register Case No.C.C. 34 of 2024 PW : 6

Sessions

Prosecution

Deposition of witness for Defence

Court

Name : திரு.தனஞ்செயலு

Father's Name : திரு. நரசிம்மலு நாயுடு

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age : 60

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.04.2026.

**<u>தேதி..27.04.2026 ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 34/2024, அ.த.சா.6. திரு. தனஞ்செயலு, த/பெ. நரசிம்மலு நாயுடு வயது 60 அவர்களை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செயய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது முனுசாமி நாயுடு கண்டிகையில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 1–வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.த.சா.ஆ 4 குறியீடு செய்யப்படுகிறது**. மேற்கண்ட கையொப்பத்தை நான் 27/12/2023 காலை 11.00 மணியளவில் எங்கள் ஊர் பேருந்து நிறுத்தத்தில் வைத்து போட்டேன் அப்பொழுது ஆஜர் எதிரியை போலீசார் கைது செய்தனர் அதற்காக என்னிடம் மேற்கண்ட கையொப்பத்தை பெற்றனர். முதல் நாள் எனது அக்காவை ஆஜர் எதிரி கழுத்தை நெரித்து வழக்கு ஆனாதற்காக மேற்கண்ட எதிரியை கைது செய்தனர். எலும்மிச்சை மரத்தை வெட்டியது சம்பந்தமாக எனது அக்காவை அவன வச்சியிருக்கியா இவன வச்சியிருக்கியா என்று கேட்டார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது மகன் விவேக் எப்போது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் 26/12/2023 மாலை 05.00 மணிக்கு. எனக்கும் ஆஜர் எதிரிக்கும் பட்டா எண் 1113 சர்வே எண் 6/2019 –ல் பிரச்சனை உள்ளதா என்றால் மேற்படி சர்வே நம்பர் என்னுயைது கிடையாது எனது தம்பியின் உடையது. ஜீவரத்தினம் அம்மா சத்தம் போட்ட பின்னர் தான் நான் வீட்டிற்குள் சென்றேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் நான் எங்கள் சம்பவம் நடந்தது என்று கூறியுள்ளேனா என்றால் சரியல்ல. எனது மாமியார் வீடு கிருஷ்ணமூர்த்தி கோவில் தெருவில் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

**ஒப்பம் A. தரணிதரன்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்,**

**பள்ளிப்பட்டு**